பதிவு எண். எம். 8123. தமிழியக்க நாளிதழ் விலை காசு 6.

# குறள் நெறி

தமிழ் வாழ்க

ஆசிரியர்: சி. இலக்குவனார் எம்.ஏ.,எம்.ஓ.எல்.,பிஎச்.டி

கி. மு. ஏழாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட தமிழக நிலையை அறிவதற்குத் தமிழிலும் ஆங்கிலத்திலும் ஆசிரியர் இலக்குவனாரால் எழுதப்பட்டுள்ள தொல்காப்பிய ஆராய்ச்சியைப் படியுங்கள்.

தமிழ் விலை உரு. 4-00
ஆங்கிலம் ,, ,, 25-00

கிடைக்குமிடம் :
"குறள் நெறி"
வெளியீட்டகம்
மதுரை 5.

மலர் 1 | மதுரை ஐப்பசி கஅ (3-11-66) வெளியூர் ஐப்பசி கசு (4-11-66) | இதழ் 138

# நிலவரி மீதுள்ள கூடுதற் கட்டணம் திரும்பப் பெறப்பட்டது.

## தமிழகச் சட்டமன்றத்தில் முதலமைச்சர் அறிவிப்பு.

**"இவ்வாண்டு சூலை முதல் நாள் முதல் தொடங்குகின்ற பயிரீட்டுக்கு நிலவரி, தண்ணீர் வரி மேலுள்ள 25 விழுக்காட்டுக் கூடுதற் கட்டணம் வசூலிக்கப்படாது" எனத் தமிழக முதலமைச்சர் பக்தவத்சலம் சட்டமன்றத்தில் அறிவித்துள்ளார்.**

சென்னை, நவ 2–

அண்மையில் காரைக்குடியில் கூடிய தமிழ்நாட்டுக் காங்கிரசுக் குழுவில் "நிலவரியைத் திரும்பப்பெற வேண்டும்" என்று முடிவெடுக்கப்பட்ட தன்றோ! இதனைச் செயலாற்று முகத்தான் தமிழக முதலமைச்சர் எம். பக்தவத்சலம் சட்டமன்றத்தில் ஓரறிக்கை அளித்துள்ளார்.



அதில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது.

"நிலவரி பல ஆண்டுகளாக இருந்து வருகிறது. அதில் ஒரு சீர்திருத்தம் செய்ய அரசினர் எண்ணிவந்தனர். புதிய நீர்ப்பாசனத் திட்டங்களுக்காக இதுவரை 104 கோடி உருபா செலவழிக்கப்பட்டுள்ளது.

நிலவரியுடன் நீர்வரி ஊராட்சிமன்றங்கள் போடும் தலைவரி, கூடுதற் கட்டணம் ஆகியவையும் இருந்துவந்தன.

எனவே அடிப்படை நிலவரியை எடுத்துவிட்டு மற்ற வரிகளைத் தொடர்ந்து வைத்திருக்க வேண்டியுளது. இச்சிக்கலைப்பற்றி ஆய்வதற்கு வருவாய்க் குழுவின் முதல் உறுப்பினரை சிறப்பு அலுவலராக அரசினர் பதவியில மர்த்தியுள்ளினர்.

எனவே நிலவரி நீர்வரியின் மீதுள்ள 25 விழுக்காடு கூடுதற் கட்டணம், இவ்வாண்டு சூலை முதல் நாள் முதல் தொடங்கப்பட்டுள்ள பயிரீட்டுகட்கு, வசூலிக்கப்படாது. இக்கூடுதற் கட்டணத்தை முன்புபோல் டிசம்பர், சனவரித் திங்களில் கட்ட வேண்டியதில்லை. இதனால் அரசுக்கு உரு $1\frac{1}{2}$ கோடி இழப்பு நேரிடும். நிலவரி திரும்பப் பெறப்படுவதைக் குறித்துச் சிலருக்கு அச்சமும் ஐயப்பாடும் இருக்கலாம். உண்மையானவற்றை ஆய்ந்தறிந்த பின்னரே அரசினர் இம்முடிவுக்கு வந்துள்ளனர். மதுவிலக்கின் பெரும் வருமானத்தை இழந்தபோதிலும் பிறதுறைகளில் சீராகச் செயல்பட்டதன் மூலம் இழப்பைச் சரிக்கட்டியதுபோல், இப்போது, அரசினர் தமது திறமையான நடவடிக்கைகள் லலம் இழப்பைச் செரிக்கட்டுவர்"

இவ்வாறு பக்தவத்சலம் தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

---

# தனியார் பள்ளிகள் பற்றிய சட்டம்

## பயிற்சிப் பள்ளிகளுக்கு விளக்கு

புதுதில்லி நவ. 2–

தனியார் பள்ளிகளைக் கட்டுப்படுத்தும் சட்டத்தில் பொறுக்குக் குழு சில மாறுதல்கள் செய்துள்ளது.

தனிப் பயிற்சிப் பள்ளிகள் உறுதி இறுப்புப் பணம் கட்டத் தேவையில்லை.

விலக்கு விதி வருவாயையும் பயில்வோரின் எண்ணிக்கையையும் பொறுத்தது.

அரசின் இசைவேற்று நடைபெறும் பள்ளிகள், கல்லூரிகளினின்று தனியார் பயிற்சிப் பள்ளிகளை (Tutorial) வேறுபடுத்த 'பயிற்சி' போன்ற அடைமொழிச் சொற்கள் பள்ளி அல்லது கல்லூரிகளின் பெயர்களோடு இணைந்தே இருக்கவேண்டும்.

50 அல்லது அதற்குக் குறைவான மாணவருள்ள பள்ளிகளுக்கும் 100க்குக் குறைவான மாணவருள்ள தொழிற்நுட்பக் கல்லூரிகளுக்கும் விதி விலக்கு உண்டு. வருமானம் ஆயிரத்திற்குக் குறைந்தாலும் விதி விலக்குண்டு.

கணக்குத் தணிக்கை விதிகளை மீறுபவர்களுக்குத் திருத்தப்படி சிறைத் தண்டனை கிடையாது.

★

# தங்கக்கட்டுப்பாடுச் சட்டம்

## திரும்பப் பெறப்பட்டது!

### பாராளுமன்றத்தில் நிதியமைச்சர் அறிவிப்பு

புதுதில்லி, நவ—2

எத்துணையோ பொற்கொல்லர்களின் வாழ்வைப் பாழாக்கிய பின்னர், இப்போது தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் திரும்பப் பெறப்பட்டுள்ளது. இத்தகவலைப் பராளுமன்றத்தில் நிதியமைச்சர் சசிந்திர சௌத்திரி அறிவித்தார்.

இதன்படி முன்புபோல் தங்கத்தை உருக்கி நகையாகவும் பிற அணிகலன்களாகவும் செய்துகொள்ளலாம்.

தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் நடைமுறையில் இருந்தபொழுது 22 காரெட் நகைகளை உருக்கவோ பிற அணிகலன்களாக மாற்றவோ இயலாவண்ணம் இருந்தது. இப்போது தங்கத்தை உருக்கி நகையாகவோ அணிகலன்களாகவோ ஆக்கிக்கொள்ளலாமெனினும் இது அரசினர் அனுமதிபெற்ற பொன்வினைத் தொழிலாளராலேயே செய்யப்படவேண்டும்.

தங்கக்கள்ளக் கடத்தலுக்கும், தங்கக்கட்டிகளைப் பதுக்குதலுக்கும் இக்கட்டுப்பாடு விலக்கு வகை செய்யாது.

தங்கக் கட்டுப்பாட்டுச் சட்டம் மொரார்சி தேசாய் நிதியமைச்சராக இருந்தபொழுது கொணரப்பட்டதாகும். இச்சட்டம் கொணரப்பட்டபொழுது எண்ணற்ற பொற்கொல்லர் வேலையிழந்ததையும் பட்டினியால் உயிர் நீத்ததும் மறக்கவியலாத துயர நிகழ்ச்சிகளாகும். ★

---

# இந்தி முதன்மை இன்னும் நீங்கிலதே.

# குறள்நெறி

தமிழ் வாழ்க

தி. வ. ஆண்டு 1997 ஐப்பசி 18 வியாழன் (3—11—66)


ஏந்திய கொள்கையார் சீறின் இடைமுரிந்து
வேந்தனும் வேந்து கெடும். — குறள்

## கூட்டணியின் கொள்கை என்ன ?

மக்களாட்சி முறையில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் தவிர்க்க முடியாத அமைப்புக்களாகிவிட்டன. மக்களாட்சியின் பிறப்பிடமாம் இங்கிலாந்தில் கட்சியாட்சி முறை செவ்வனே நடைபெற்று மக்களாட்சி முறையால் மக்கள் நலனடைந்து வருகின்றனர். அங்கு ஆளுங்கட்சி எதிர்க்கட்சியாகவும், எதிர்க்கட்சி ஆளுங்கட்சியாகவும் இயற்கையாக நிகழும் செயல்களாகிவிட்டன.

இங்கிலாந்துக்கு அடிமைப்பட்டிருந்த இந்தப் பெருநாட்டில் மக்களாட்சி முறையைப் பின்பற்றுவதாகக் கூறிக் கொண்டாலும், ஒரே கட்சியே பல ஆண்டுகள் ஆளும் பொறுப்பில் இருந்துள்ளது. ஆளுங்கட்சியினர் "எதிர்க்கட்சி இன்றியமையாததுதான்; எதிர்க்கட்சி இடத்தை நிரப்புவதற்குத் தகுந்த கட்சி கிடையாது" என்று கூறிக்கொண்டு வருகின்றனர்.

நாட்டு மக்களின் வறுமை நிலையாலும் கல்வியறிவின்மையாலும் மக்களாட்சிபற்றிய அறிவு இன்மையாலும், தேர்தல் வெற்றி சாதி, மதம், பொருள்நிலை முதலியனவற்றைப் பொறுத்தே அமைகின்றது.

ஒரே கட்சி பல முறை வெற்றி பெற்று ஆட்சியிலமர்வதனால் கட்சியாட்சி முறை மடிந்து வல்லாட்சி முறை ஓங்க வாய்ப்பு ஏற்பட்டு விடுகின்றது. இன்று நம் நாட்டில் காணும் நிலையும் இதுதான்.

67-ல் நடைபெற இருக்கும் தேர்தலில் மீண்டும் காங்கிரசே வெற்றி பெறுமானால் மக்களாட்சி முறை இங்கு நிலைக்குமா என்பது ஐயத்திற்குரியது. ஆகவே மீண்டும் காங்கிரசு ஆட்சிக்கு வராமல் தடுப்பதற்காகவே எல்லாக் கட்சிகளெல்லாம் ஒன்றுபட்டுக் கூட்டணியாகச் செயல்பட நல் முயற்சி நடைபெறுகின்றது.

காங்கிரசுப் பெருந்தலைவர்கள் எல்லாரும் 'இக் கூட்டணியின் கொள்கை என்ன? காங்கிரசை வெல்ல வேண்டும் என்பதைத் தவிர இவர்களிடையே ஒன்றுபட்ட கொள்கையாதுளது?" என மேடைகள் தோறும் முழங்கி வருகின்றனர்.

[illegible] கையே முதன்மையான ஒன்றுதான். காங்கிரசால் நாட்டு மக்கள் அடைந்துள்ள தீமைகளை அகற்ற நாட்டுமொழிகளை ஒருமொழிக்கு அடிமைப்படுத்தும் கொடுங்கோன்மையைப் போக்க கூட்டணிக்கு காங்கிரசை வீழ்த்த வேண்டும் என்ற கொள்கையிலும் சிறந்த கொள்கையாதுளது. இத் தலைமையான கொள்கையின் சிறப்பை அறியாது கூட்டணிக்குக் கொள்கை கிடையாது என்று கூறுவது உண்மையைத் திரித்துக்கூறுவது ஆகும்.

ஆகவே கூட்டணியினர் இக்கொள்கையில் உறுதியாக நின்று செயல்படுவதே இன்று வேண்டற்பாலது ஆகும். கூட்டணியின் வெற்றியே மக்களாட்சியின் வெற்றியாகும்.

## தொடர்வண்டி வரும் நேரத்தை மாற்ற மாணவர்கள் வேண்டுகோள்

தஞ்சாவூர், நவ 1- பூண்டிபுட்பம் கல்லூரி மாணவர்கள் தஞ்சாவூருக்கும் மாரியம்மன் கோயிலுக்கும் இடையில் தஞ்சாவூர்-நாகூர் பயணிகள் வண்டியை நிறுத்தினர். இதனால் தஞ்சாவூருக்கும் திருவாரூர்க்கும் இடையேயான தொடர் வண்டிப் போக்குவரத்து தடைப்பட்டது.

குடிகாடுத் தொடர்வண்டி நிலையத்திலிருந்து சென்றுகொண்டிருக்கும் மாணவர்கள் கல்லூரிக்குக் குறித்த காலத்திற்குச் செல்ல ஏற்கேற்பத் தொடர்வண்டிப் பயண நேரங்களை மாற்ற வேண்டுமென்பதே இவர்களது வேண்டுகோளாகும்.

தஞ்சாவூரிலிருந்து குறித்த காலத்தில் புறப்பட்ட நாகூர் நகர் பயணிகள் வண்டியை மாணவர்கள் சங்கிலியைப் பிடித்திழுத்து நிறுத்தினர். இதன் பின்னர் தஞ்சாவூர்த் தொடர் வண்டி நிலைய அலுவலர் என். காளிந்தராசு, மாணவர்களைச் சந்தித்து, மாணவர்களின் குறைகளைத் தொடர் வண்டி அலுவலர்களிடம் கூறுவதாக உறுதிமொழி அளித்தார். அதன் பின்னரே மாணவர்கள் தங்கள் கிளர்ச்சியைக் கைவிட்டனர். இதனால் தொடர் வண்டி இரண்டரை மணிநேரம் காலம் தாழ்த்திப் புறப்பட்டது.

திருவனந்தபுரம் - சென்னை துரிதப் பயணிகள் வண்டி சென்னை செல்லும் வழியில் தஞ்சாவூருக்கு மாலை 6-40 மணிக்கு வந்தது. இவ்வண்டி இரவு 7 மணிக்குத் 'திட்டை' என்ற தொடர்வண்டி நிலையத்தை அடையும்போது மாணவர்கள் வண்டியைத் தடுத்து நிறுத்தினர். மாற்றி அமைக்கப்பட்ட தொடர் வண்டிக் கால அட்டவணைப்படி இந்நிலையத்தில் வண்டி நிற்பதில்லை. இவ்விடத்தில் முன்பு போல் வண்டி நிற்க வேண்டுமென்பதே மாணவர்களின் வேண்டுகோளாகும்.

இந் நிலையத்திற்கும் தஞ்சைத் தொடர் வண்டி நிலைய அலுவலர் விரைந்து வந்தார். அவர் வேண்டுகோளின் பேரில் மாணவர்கள் அவ்விடத்தை விட்டு அகன்றனர்.

இரவு 7 மணிக்கு நிறுத்தப்பட்ட வண்டி 9-35 மணிக்குப் புறப்பட்டுச் சென்றது. எனவே 2-30 மணி நேரம் காலத்தாழ்வு ஏற்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்து விழுப்புரம் திருச்சி பயணிகள் வண்டி பசுபதி கோவிலில் நிறுத்தி வைக்கப்பட்டதனால் 1-30 மணி நேரம் காலம் தாழ்த்திச் சென்றது.

## சஞ்சீவிரெட்டிக்கு சரிவுகாலமா?

விசாகை நவ. 31

நடுவணரசின் போக்குவரத்து அமைச்சர் சஞ்சீவி ரெட்டியின் படிமத்தை மாணவர்கள் துண்டு துண்டாய் நொறுக்கி, அத் துண்டுகளை ஏலூறு வாய்க்காலில் வீசியெறிந்தனர்.

தொடக்கத்தில் படிம முகத்தை அலங்கோலப் படுத்தி, இழிவு வண்ணம் பூசி குப்பை கூளங்களை ஒட்ட வைத்து, கையில் துடைப்பத்தைச் செருகி, 'சஞ்சீவி ரெட்டி வீழ்க' என்ற முழக்கத்தை எழுப்பினர்.

அதன் பின் மேடை மீதேறி, படிமத்தைக் கீழே தள்ளி துண்டு துண்டாக உடைத்து நொறுக்கினர்.

1964 இல் குண்டூரில் அனைத்திந்தியக் காங்கிரசு கூடிய போது இதனை காங்கிரசுத் தலைவர் காமராசர் திறந்து வைத்தார். அந்தக் காலத்திலேயே அதற்கு எதிர்ப்பு இருந்தது. இவ்வெதிர்ப்பை விளக்கமாகக் கூறி அன்றைய தலைமை அமைச்சர் இலால்பகதூர் சாத்திரிக்கு நீண்டதோர் அறிக்கை அனுப்பியிருந்தனர்.

## ஆசிரியர்களைப் பொதுமக்கள் மதித்துப் போற்றவேண்டும்!

### மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் வேண்டுகோள்

(குறள்நெறிச் செய்தித் துறை)

பரமக்குடி நவ. 2— பரமக்குடி இரவி திரைப்பட அரங்கில் வட்டார ஆசிரியர்கள் சார்பாகத் தேசிய விருது பெற்ற இராமநாதபுரம் அரசர் சேதுபதி உயர்நிலைப் பள்ளியின் தலைமை ஆசிரியர் திரு. எம். இராசா அய்யரு (எம்.எல்.சி) [illegible] வில் மதுரைப் பல்கலை கழக துணை வேந்தர் தெ.பொ. மீனாட்சிசுந்தரனார் பங்கு கொண்டு உரையாற்றினர்.

அவர் மேலும் கூறியதாவது; ஆசிரியர் மன்பதையை உலகம் என்று போற்றுகிறதோ அன்றுதான் உலகம் முன்னேற இயலும்.

பள்ளி ஆசிரியர்கள் எதிர்காலத் தலைமுறையினரை உருவாக்கும் ஆற்றல் பெற்றவர்கள். எனினும் ஆசிரியர்களைப் பொதுமக்கள் மதித்துப் போற்றுவதில்லை. இந்நிலை என்று மாறுமோ?

ஆசிரியர்களே ஆசிரியர்களை மதிப்பதில்லை. அப்படியிருக்கும்போது ஆசிரியர்களை வேறு எவர் உயர்வாக எண்ண இயலும்?

ஆசிரியர்கள் செய்ய இயலாதவற்றை அமைச்சர்களாலும் குடியரசுத் தலைவராலும் கூடச்செய்ய இயலாது. எதிர்காலத்தை, நல்ல தலைமுறையினரை, நாட்டின் பெருமையை நாம் உண்டாக்குகிறோம் என்ற உறுதி ஆசிரியர்களுக்கு ஏற்படவேண்டும்.

நமது மன்பதையில் குறை [illegible] ஏனெனில் குறைகள் உள்ள மன்பதையில்தானே நாமும் பிறந்துள்ளோம் ஆகவே இக் குறைகளைத் தீர்க்க நாம் என்ன செய்ய இயலும் என்றெண்ணி அதற்காகப் பாடுபட வேண்டும். குழந்தைகளை அன்புடன் பேணுதல் ஆசிரியரின் தலையாய கடமை.

இவ்வாறு தெ.பொ.மீனாட்சிசுந்தரனார் கூறினர்.

தேசிய விருது பெற்ற இராசா அய்யருக்குத் தெ.பொ.மீ. பொன்னாடை போர்த்திச் சிறப்பித்தார்.

திரு என். சங்கரநாராயணன் சட்டமன்ற உறுப்பினர் செ. சீனிவாசன் ஆகியோர் இராசா அய்யரை வாழ்த்திப் பேசினர்.

முடிவில் என். நாராயணன் நன்றி நவிலக் கூட்டம் இனிதே முடிந்தது.

## சிற்றூர்களுக்கு அரிசிப் பங்கீடு உயர்வு

திருநெல்வேலி நவ. 1— சிற்றூர்களில் நவம்பர் 11-ஆம் நாள் முதல் அரிசிப் பங்கீடு 600-இலிருந்து 800 கிராமாக உயர்த்த மாவட்ட வளர்ச்சிக்குழுக் கூட்டத்தில் முடிவெடுத்திருப்பதாக மாவட்டத் தண்டல் நாயகம் திரு. இராசேந்திரன் அறிவித்தார்.

கன்னியான் கால் திருத்த வேலையை உடனடியாக எடுத்து நடத்த முடிவு செய்திருப்பதாகவும் சொன்னார்.

தாமிரபரணி (பொருநை) யாற்றின் நீர்ப்பாய்ச்சல் நேர்மையான முறையில் நடைபெறும் என்றார் அவர். இது பற்றிய முறையீடு ஆய்விலிருப்பதாகவும் ஆவன செய்வதாகவும் வாக்களித்தார்.

கலக்காட்டு மலையில் கிடைக்கும் க்கு[illegible]ரிப் புல்லிலிருந்து உணவாகும் எண்ணெய் எடுப்பதைப் பற்றி தொழிற்துறை உதவி இயக்குநர் ஆய்வுக்குப் பின் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் சொன்னார்.

## நடுவணரசு மீது நம்பிக்கை இல்லை!

### மக்களவையில் கூச்சல் குழப்பம்

புதுதில்லி நவ 1— திருமதி இந்திரா காந்தி அமைச்சர் குழுவின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் மூன்றும் முறையாக மக்களவையில் இன்று கொண்டு வரப்பட்டது. இதை நாளைக்கு ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதாக அறிவிக்கப்பட்டது.

இதனை விரைந்து ஏற்றுர் அமைச்சர் சத்தியநாராயண சின்கா என்பதை நோக்க அரசினர் தக்க அமைதி கூற முன்வருவர் என்று தெளிவு. நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் குறித்து ஐந்து அறிக்கைகள் வந்தன. சனசங்கத் தலைவரின் அறிக்கை படிக்கப்பட்டபோது, எதிர்க்கட்சியினர் பெரும்பாலோர் அதை ஆதரிக்க எழுந்தனர்.

கேள்வி நேரத்தில் எந்த ஒத்திவைப்புத் தீர்மானத்தையும் ஏற்றுக்கொள்ளப்படாதென்றும் தலைவர் தனித்துக் கண்டால் தக்க அமைதி அளிப்பதாகவும் கூறினர் அவைத் தலைவர், இப்படித் தனித்துக் காணவேண்டுவது எந்தவிதிப்படி என்று திரு. பட்நாயக் கேட்டார். உறுப்பினர் விரும்பினால் அவ்விதஞ் செய்யலாம்; அல்லது எழுதித் தெரிந்து கொள்ளலாம் என்பதே விடை. உறுப்பினர் நேரடியான விடை வேண்டுமென வற்புறுத்தினர். அதனை அவர் [illegible] சொல்ல நேர்ந்தது.

அந்தப்[illegible] ஒமிதாசி (பொதுவுடைமை) அவைத்தலைவர் சொல்லியும் திருத்தாது தொடர்ந்தமையால், அவர் பெயரும் கூப்பிடப்பட்டது.

டாக்டர் லோகியா மிகிய ஒழுங்கின நடத்தைக்குத் தான் 373 ஆம் விதிப்படி பெயரைச் சொல்லலாம், முந்திய இருவரின் நடத்தை மீறிய ஒழுங்கீனமானதெனச் சொல்வதற்கில்லை என்றும் முன் இட்ட ஆணையை மாற்றவேண்டும் என்பது தன் விருப்பம் அல்ல என்றும் விளக்கினார்.

அடுத்த திரு. மணிராம் பக்ரி அவைத்தலைவர் தம் விருப்பம்போல் நடப்பது கூடாது என மெய்ப்பாட்டோடு கூற, அவர் பெயரும் சொல்லப்பட்டது. உடனே அவரும் வெளியேறினர். அவரோடு காவலர் வெளியேற்றப்பட்டனர்.

பசிவான மருந்துகளைப் பற்றிய பொறுக்குக் குழுவின் அறிக்கை ஆய்வுக்கு எடுக்கப்பட்ட போது அவையில் சிறிது சலசலப்பு இருந்தது. அமெரிக்கா, பிரிட்டன் வற்புறுத்தல் இருப்பதால், இந்திய அரசு இதனைக் கவிழ்த்த முன் வந்துள்ளதென எதிர்க்கட்சி குறை கூறியது.

அரசு கொடுத்த உறுதியை நிறைவேற்ற வேண்டும் என இரேன்முகர்ச்சி கேட்டுக்கொண்டார்.

அரசுக்குச் சட்டவரைவைக் கவிழ்க்கும் சூழ்ச்சி விருப்பதாகக் குறை கூறுவது ஆதாரமற்றதென அமைச்சர் சின்கா கூறினர்.

## கருத்தடை பற்றிய போப்பாண்டவர் தீர்ப்பு ஒத்திவைப்பு

வாடிகன் நகர், நவ—1 வாடிகனில் கருத்தடை மாத்திரைகள் தடை செய்யப்பட்டிருந்தன. இதுபற்றி போப்பாண்டவரின் தீர்ப்பு சனிக்கிழமையன்று எதிர்பார்க்கப்பட்டது.

அவருடைய கருத்தறிய விரும்பிக் கூடிய இத்தாலிய மருத்துவர்களிடம் கருத்தடை மேலும் மேலும் படித்தறிய வேண்டிய ஒரு சிக்கலான செயல் என்று அவர் கூறினர்.

இதற்கிடையில் கத்தோலியர் மரபையொட்டி நடந்து கொள்ளவேண்டும் என்றார். அதாவது கரு ஏற்படாத காலமறிந்து நடந்துகொள்ள வேண்டும்.

## நடுநிலைநாடான கானா பொதுவுடைமையர் பக்கம் சரிகிறது.

ஆக்ரா, நவ 2- பொதுவுடைமைக் கொள்கையுடையோரான நிக்ருமாவின் வீழ்ச்சிக்குப் பின்னரும் கானாவின் படையாட்சி பொதுவுடைமை நாடுகளுடன் தனது நட்பை வலுப்படுத்தி வருகிறது.

நிக்ருமாவின் ஆட்சிக்காலத்தில் கானாவுடன் வணிகஒப்பந்தம் ஒன்று செய்துகொள்ள இசைந்த செக்கோசுலோவாகியா, நிக்ருமாவின் வீழ்ச்சிக்குப் பின்னரும் இவ்வொப்பந்தத்தை நீக்கிக்கொள்ளவில்லை. இதே போன்று உருமானியர்கள் எண்ணெய்ப் படிவங்கட்காகக் கானாவை ஆய்ந்து வருகின்றனர்.

போலந்து நாட்டினர் கானாவின் சர்க்கரைத் தொழிலை முன்னேற்றுவதற்கு ஆவன செய்து வருகின்றனர்.

உருசியா கானாவைத் தொழில்மயமாக்குவதற்கு 90 கோடி டாலரும், பொதுவுடைமைச் சீனா 4 கோடியே 20 நாலுயிரம் டாலரும், கிழக்கு ஐரோப்பிய நாடுகளின் ஆட்சிக் குழுக்கள் எட்டுக் கோடி டாலரும், அளித்துள்ளன.

இவ்வாறு பொதுவுடைமை நாடுகளின் உறுதியையே நடுநிலைநாடான கானா பொதுவுடைமை நாடுகளுடன் இணைந்த உறவு கொண்டிருப்பதற்குக் காரணமாகும், எனக்கூறப்படுகிறது.

## இந்தியாவின் மாறுபட்ட கருத்துபற்றி

### அணுவாற்றல் நாடுகள் வருத்தம்

ஐ.நா. நவ. 1— உலக நாட்டு ஒன்றிப்புப் பேரவையில் கடந்த திங்கட்கிழமையன்று இந்தியாவின் நிகழ்த்திய பேச்சு மேலை நாட்டினருக்கு, அதிலும் குறிப்பாக அணுவாற்றல் பயன்படுத்தும் நாட்டினருக்கு வருத்தமளித்தது.

ஒப்பந்தத்தில் கையெழுத்திட குறிக்கும் கட்டுப்பாட்டில், திரு. திருவேடி கின்வா மாநாட்டில் கூட்டுச்சேரா நாடுகள் எடுத்த முடிவை மீறுவதாகப் பிரிட்டன் உறுப்பினர் கூறினர். இவர் அண்மையில் இந்தியாவில் இருந்த போது தலைமையமைச்சர் உள்பட இந்தியத் தலைவர்களோடு இதுபற்றிக் கலந்து பேசியதும் உண்டு என்றார்.

கையெழுத்திட புதிய கட்டுப்பாட்டை இந்தியா இப்போது கூறுகிறது என்பதுதான் மேலை நாட்டினர் இன்னின்ன பொதுவான கருத்து.

இந்தியச் சார்பினர் இதை மறுக்கின்றனர். இரண்டாண்டுகளுக்கு முன்பே பதினெட்டு நாடுகள் கூடிய படைப்பொழிப்பு முடிவெடுத்த காலத்திலேயே இந்தியாவின் நிலை இன்னதெனத் தெளிவுபடுத்தப்பட்டது. இதுவே நாம் இப்போது கூறுவதும் என்பதே இந்தியா கூறும் அமைதிமொழியாகும்.

## மக்களைக் காக்கத் தவறிய ஆட்சியை 67-இல் மாற்றியாக வேண்டும்.

-பி. இராமமூர்த்தி

திருப்பரங்குன்றம், நவ 2- திருப்பரங்குன்றம் பொதுவுடைமைக் கட்சித் தோழர்களால் இடதுசாரிப் பொதுவுடைமைத் தலைவர் பி. இராமமூர்த்தி அவர்களுக்குக் காலை 9 மணியளவில் சிறப்பான வரவேற்புக் கொடுக்கப்பட்டது. அவ்வரவேற்புக்கு நன்றிகூறி திரு. இராமமூர்த்தி பேசியதாவது:

“கடந்த 19 ஆண்டுகளாக இந்நாட்டை ஆண்டுவரும் காங்கிரசு ஆட்சியிலே நாட்டில் அமைதியில்லை. எங்கு நோக்கினும் கிளர்ச்சிகளும் பெருகிவிட்டன. இதற்குக் காரணம் இவ்வாட்சியின் திறமைக்குறைவே தவிர [illegible] விலைகளைக் கட்டுப்படுத்தி மக்களை நல்லமுறையில் வாழ வைக்கவில்லை. மூன்று ஏக்கர் நிலத்திற்கு மேல் உள்ளவர்களிடம் அவர்கள் தேவைக்குப் போக எஞ்சியதைக் கொள்முதல் செய்யாததனால் நாட்டில் கள்ளவாணிகம் பெருகிவிட்டது. மாணவர்களுடைய குறைகளைப் போக்கத் தவறியதால் மாநிலத்திற்கு மாநிலம் மாணவர் கிளர்ச்சி வலுப்பெறுகிறது. இத்தகைய குறைபாடுகளைக் களைய முடியாத ஆட்சிக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் பொருட்டும், குறிப்பாக உணவுப்பண்டங்களின் விலை உயர்வைக் கண்டிப்பதற்கும் வருகிற நவம்பர் 6-ஆம் நாள் கிளர்ச்சி நாளாகக் எல்லாக் கட்சியினரும் கொள்ள இருக்கின்றனர். அத்துடனல்லாது வரும் 67 தேர்தலில் இந்தக் காங்கிரசு [illegible] எதிர்க்கட்சியினரும் ஒன்று சேருகின்றனர். அப்படி உடன்பாடு ஏற்பட்டு இத்தொகுதியில் காங்கிரசு தவிர மற்ற எதிர்க்கட்சி வேட்பாளர் யார் போட்டியிட்டாலும் மக்கள் அவர்களுக்கு ஆதரவு நல்கி எதிர்க்கட்சி வேட்பாளரை வெற்றி பெறும்படி செய்வது இத்தொகுதி மக்கள் கடமையாகும்” என முடித்தார். பின் செயலாளர் நன்றி கூறினர்.

## இந்தோ-சப்பானிய அரசினர் பேச்சு முடிவு

டோக்கியோ, நவ—1 நல்ல சூழ்நிலையில், நட்புறவில், மனம்விட்டுப் பேசி, நடந்த இந்தோ-சப்பானிய நாட்டுறவுப் பேச்சு இன்றிரவு முடிவுற்றது.

புதுதில்லியில் நடந்த பேச்சின் தொடர்ச்சியாக இது நடப்பது இரு நாட்டின் நட்புறவு முன்னேற்றத்துக்கு நல்லதோர் அறிகுறி.

இவ்வமைப்பு இரு நாட்டு வெளியுறவு அதிகாரிகளால் ஆனது. இதில் இந்திய வெளியுறவு அமைச்சச் செயலர் திரு. ஜா-வும் ஒருவர். இக்கூட்டத்தால் கடந்த ஏழு திங்களில் நடந்த உலகநாட்டுச் செயல்கள் நல்ல முறையைக் கலந்து பேச நல்ல வாய்ப்பு இருந்தது.

ஆசிய ஆப்பிரிக்க நாடுகளின் [illegible], படையெடுப்பு, அணுக்கருவிப் பயன்படுத்தல், இந்திய சப்பானிய ஒத்துழைப்பு போன்ற வேறு பல செயல்களும் பேசப்பட்டன.

## தி. மு. க. தேர்தல் கலை நிகழ்ச்சி

தி.மு.க. தேர்தல் கொள்கை விளக்கப் பொதுக்கூட்டம். திரு. அக்கினிராசு பி.ஏ. தலைமையில் 2—11—66-ல் சிவகெங்கை சேதுராசனின் கலைநிகழ்ச்சியும் நடைபெற்றது

## அன்பர் அஞ்சல்

ஐயா,

1955-இல் தஞ்சூர் குழுவினரின் அறிக்கைக்குப் பின்னர் சேலம் உருக்காலைத் திட்டம் தமிழக மாநில அரசின் பார்வைக்கு கொணரப்பட்டது. இரண்டாவது, மூன்றாவது, நான்காவது என மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களிலும் அடுத்த திட்டத்தில், அடுத்த திட்டத்தில் என்று கூறியே நம்மை ஏய்த்து விட்டனர் நடுவண் அரசினர்.

இதில் வேதனைக்கும் வேடிக்கைக்கும் உரிய நிகழ்ச்சி என்னவென்றால் 62 தேர்தலின் தமிழகத்தில் சேலம் உருக்காலை ஒரு சிக்கலாக வைக்கப்பட்ட பின்னர் நடுவண் அமைச்சரவையில் ஒரு தமிழர்க்கு இரும்புக் கனிவளத்துறை அமைச்சர் பதவி கொடுக்கப்பட்டது. அதன் பின்னரும் கூட சேலம் உருக்காலை பற்றிய நடவடிக்கைகளில் எவ்வித முன்னேற்றமும் ஏற்படவில்லை.

தமிழகத்தின் தீவினைப் பயனோ—பேரு மறைந்தபின் இரும்பு உருக்குத்துறை அமைச்சர் பதவியும் தமிழர் கையிலிருந்து தெலுங்கர் கைக்கு மாறியது. பதவி வந்த சில நாட்களுக்குள்ளேயே சேலத்தில் உருக்காலை இல்லை என நேர்முகமாகவும் மறைமுகமாகவும் எடுத்துச் சொல்லிவிட்டார் சஞ்சீவி ரெட்டியார்.

சாத்திரியார் மறைந்தார். இந்திரா காந்தி ஒரே இடத்தில் பெரியதோர் உருக்காலை நிறுவுவதற்குப் பதிலாக வெவ்வேறு இடங்களில் சிறு சிறு உருக்காலைகள் நிறுவலாம் எனக்குறிப்பிட்டார். இந்தத் திட்டமும் என்னவாயிற்றோ தெரியவில்லை.

இப்போது கொசப்பேட்டை (விசாகப்பட்டினம்) உருக்காலைக்காக ஆந்திரா மிகப்பெரும் கிளர்ச்சியொன்று செய்து வருகின்றனர்.

இதன் விளைவாகச் சிறு அளவிலேனும் கொசப்பேட்டையில் உருக்காலை நிறுவப்படப் போவது உறுதியே.

இறுதியில் தமிழர்கள்தான் இளிச்சவாயர்களாக்கப்பட்டுள்ளனர்.

“வன்முறைக்கும் கிளர்ச்சிக்கும் மட்டுமே இவ்வரசு செவிசாய்ப்பது ஈர்ங்கைவிதிரார் கயவர், கொடிறுடைக்கும் கூன்கையர் அல்லாதவர்க்கு என்ற வள்ளுவர் வாய்மொழியையே நினைவூட்டுகிறது.

தமிழக மக்கள் இனியேனும் ஏமாறாது, வரும் தேர்தலில் காங்கிரசாட்சியைக் கவிழ்ப்பதே, நம் குறைகளை வருங்காலத்திலேனும் நிறைவு செய்து கொள்ளத் தகுந்த, தருணத்துக்கேற்ற செயலாம்.

இங்ஙனம்
கோ. தமிழ்மன்னன்,
மதுரை


## "குறள் நெறி" நாளிதழ்

தனி இதழ் விலை காசு 6.

அஞ்சல் வழியாகப் பெறுவதற்குத் திங்கள் கட்டணம் உரு. 2-50

ஆண்டுக்கட்டணம் உரு. 25-00

புரவலர் கட்டணம் உரு. 1000-00

விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

விளம்பரங்கள் பெற்று அனுப்புவோர்க்கு 25% கழிவு உண்டு.

"குறள் நெறி" திங்களிருமுறை : தமிழ் :

தனி இதழ் விலை 25 காசு.

ஆண்டுக் கட்டணம் உரு. 6-00

இரண்டாண்டுக் கட்டணம் உரு 10-00

புரவலர் கட்டணம் உரு. 100-00

"குறள்நெறி" திங்களிருமுறை : ஆங்கிலம்:

தனி இதழ் விலை 20 காசு.

ஆண்டுக் கட்டணம் உரு. 5-00

ஊர்கள் தோறும் முன் பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் வேண்டப்படுகின்றனர்.

விவரங்கட்கு:

ஆசிரியர்
'குறள்நெறி'
திருப்பரங்குன்றம்
மதுரை—5

குறள் நெறி
தமிழ் வாழ்க

# சென்னைக் கோட்டையைச் சுற்றிக் காவற்படையினர்!

## மதியழகனின் மறுப்பு

கலைஞர் மு. கருணாநிதியின்

# காகிதப்பூ

## நாடகத் திறனாய்வு:

( நெல்லை நகரச் செய்தியாளர் )

"நாடகத்தாய் ஈன்ற மகவு தான் திரைப்படம்" என்பது நாமறிந்த உண்மை. திரைப்படத்தை விட உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஊட்டும் வகையில் நாடகத்தில் மெய்ப்பாடுகளை நடித்துக்காட்ட வியலும்



என்பதைக் கலைஞர் மு. கருணாநிதி எழுதி நடிக்கும் "காகிதப்பூ" நாடகம் உறுதிப்படுத்துகிறது.

இந்நாடகம் மாநிலமெங்கும் முதன்மையான நகர்களில் கழகத் தேர்தல் நிதிசேர்க்கும் பொருட்டு நடிக்கப்படுகிறது.

அக்டோபர் 30 ஆம் நாள் திருநெல்வேலியில் நெல்லை நகராட்சி மன்ற வழக்குநிதிக்காக இந் நாடகம் நடிக்கப்பட்டது.

திரைப்படம் பார்க்கும் போது ஏற்படுகின்ற உணர்வினும் மிகுதியான உணர்ச்சியை இந்நாடகம் மக்களிடையே ஏற்படுத்துகிறது. குடியாட்சிப் பண்பிற்கு ஊறு ஏற்படாவகையில் தனிப்பட்டவர்களை ஏளனம் செய்யாமல் நல்ல கருத்துக்கள் பரிமாறப்படுகின்றன.

"எழு! தமிழா!! என்ற இசையோடு நாடகம் தொடங்குகிறது. தொடக்கத்தில் காலஞ் சென்ற நகைச்சுவை மன்னர். கலைவாணர் திரு. கிருட்டிணன் அவர்களின் திரு உருவம் காட்டப்படுகிறது. பின்னர் நாடகம் முழுவதும் நகைச்சுவை உணர்வோடு கருத்து வெள்ளம் மடை திறந்தநீர் போல் பொங்கி வழிகிறது,

தொடக்கத்தில் முரசொலி மாறன் தீட்டிய 'வஞ்சியும் காஞ்சியும்" என்ற ஓரங்க நாடகம் பயன் உள்ளவகையில் அமைந்துள்ளது. இக் காட்சியில் சேரன் செங்குட்டுவனும், காஞ்சிப் பேரறிஞர் கா. ந. அண்ணாதுரையாரும் நடத்தும் உரையாடல் பண்டைய வரலாற்றையும் நிகழ்கால நிகழ்ச்சிகளையும் படம் பிடித்துக் காட்டுகிறது. அறிஞர் அண்ணாவின் விளக்கங்கள் அனைவர்க்கும் அறிவு புகட்டும் வகையில் அமைந்துள்ளன.

அடுத்ததாக ஏழை நெசவுத் தொழிலாளியின் குடும்பம் படும் துயரத்தை வருணிக்கின்ற காட்சி மக்களின் உள்ளத்தைத் தொடும் வகையில் அமைந்துள்ளது.

"உத்தமர் காந்தி உண்மை ஊழியர் சங்கச்" செயலர் கண்ணனைக் கலைஞர் மு. கருணாநிதி நடித்துள்ளார். அவர் தன் தாயிடம் தான் காங்கிரசைத் தூய்மைப் படுத்தும் பணியில் ஈடுபட்டிருப்பதாகக் கூறும் போது, அவர்தாய் "காங்கிரசைத் தூய்மைப் படுத்தயாராலும் இயலாது, அம்முயற்சி 'அலை கடலில் மூழ்கிவிட்ட ஒரு பொருளை விளக்கு கொண்டு தேடுவதை ஒக்கும்." எனக்கூறுவது உண்மை நிலையைத் தெளிவாக எடுத்துரைக்கிறது. அவர் காங்கிரசுக் கட்சியிலிருந்து மனமறுமலர்ச்சி ஏற்பட்டுத் தி. மு. கழகத்தில் சேருகிறார். இக் காட்சியில் அவரது (மு.க.) நடிப்பும் உரையாடலும், ஒலி ஒளி அமைப்பும் சிறப்பாக உள்ளன.

இறுதியாகக் காங்கிரசுக்காரர். திரு. திரவியம் பிள்ளை நடாத்தும் மக்களாட்சிச் சமநிலை மாநாடு (சனநாயக சோசலிச மாநாடு) காங்கிரசின் உதவாக்கரைக் கொள்கைகளை மக்களுக்கு வெட்ட வெளிச்சமாக்குகிறது. அம்மாநாட்டில் கழகத்தொண்டன் கண்ணன் ஆற்றும் உரை தமிழக மக்களுக்குத் தேர்தல் பற்றிக் கூறும் அறிவுரையாக அமைகிறது.

கண்ணனின் தாயாக நடித்த தோழியரும் திரவியம் பிள்ளையின் நண்பராக நடித்தவரும் திறம்பட நடித்துள்ளனர்.

இந்நாடகத்திற்கு வழக்கறிஞர் இரத்தின வேல் பாண்டியன் தலைமை தாங்கினார். நாடகத்தின் மூலம் செலவு போக 8500 உருபா வசூலிக்கப்பட்டது. நாடக முடிவில் கலைஞர் உரையாற்றினார்.

இறுதியில் நெல்லை மகசுத்தான் நன்றி கூறக் கூட்டம் இனிதே முடிந்தது.

# வாக்குரிமைப் பதிவு மிகுந்தால் காங்கிரசு தாழ்வுறும்.

புதுதில்லி, நவ, 2-

மக்கள் மனமறிவாளர் திரு எரிக்டா கோசுடா வரும் பொதுத் தேர்தலில் மக்கள் வாக்குப்பதிவு செய்வது காங்கிரசை அச்சுறுத்தும் என்பது இதுவே முதல் முறையாகும். வாக்குப் பதிவுச் சாவடிக்கு மிகுதியாக மக்கள் தொகையிருந்தால், காங்கிரசு வாக்குகளைப் பெற்று மிகுதியான இடங்களைக் கைப்பற்றும் என்பது ஐயமே. 1967 முதல் அவர் செய்த கருத்தறிவு ஆய்வில் பொருளாதார இழிநிலைமக்கள் மனக்கசப்பை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிகிறது. இந்த மாறுதலுக்குக் காரணம்மாணவரென்றோ பொதுவுடைமைக் கட்சியென்றோ கருதுவது தவறு.

படித்தவர்களிடமோ வாக்குரிமை அகவை எட்டிய மக்களிடமோ காங்கிரசு கட்சிக்குப் பிடிப்பில்லை என்றால் அதற்குக் காரணம் உண்டு.

சில மாநிலங்களில் சிறுபான்மை மக்கள் காங்கிரசிடமுள்ள நம்பிக்கையை இழந்து வருகின்றனர். காங்கிரசு சார்பினராக இருந்த இம்மக்களின் வாக்குப்பதிவு உறுதியில்லை என்பதால் தேர்தல் முடிவு இன்னதெனத் திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை.

வரும் தேர்தலில் 100-க்கு 11 ஆகக் குறைந்தாலுங்கூட கடந்த தேர்தலில் பாராளுமன்றத்தில் 358 இடங்களைக் கைப்பற்றிய காங்கிரசு 292 இடங்களையேனும் பிடிக்கலாம். இதில் இழப்பு மிகுதியாக இராதெனக் கருதுகிறார்.

# ஊதாண்ட் பதவி நீடிப்பாரா?

ஐ. நா. நவ—1

ஐ. நா. செயலர் ஊதாண்ட் பதவியில் நீடிக்கவேண்டும் என்று உலகநாடுகளனைத்தும் விரும்புவது தெரிந்ததே. நேற்று நடந்த ஐ.நா. பொதுக் குழு கூட்டத்தில் உறுப்பினர்கள் அனைவரும் ஊதாண்ட் அடுத்த மாதம் 20ம்-தேதி வரை பதவியில் நீடித்திருக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்து உரை நிகழ்த்தினர். இதற்கு விடை அளித்து ஊதாண்ட் பேசுகையில் தாம் பதவியில் நீடித்திருப்பது ஆசிய, ஆப்ரிக்க நாடுகளில் நிலவும் அமைதியையும், வியத்துநாம் பிரச்னையில் தீர்வுகாண்பதையும் பொறுத்துள்ளது என்று கூறினார். வியத்துநாம் சிக்கலில் தம் கெடுபிடியை அமெரிக்காவும் சோவியத் உருசியாவும் குறைத்துகொள்ள வேண்டுமென்பதே இதன் உட்பொருளாயிருக்கலாம்.

சென்னை, நவ—1

கோட்டையைச் சுற்றி காவற்படையினரின் தடை ஆணை பிறப்பித்திருப்பதுபற்றி மதியழகன் ஒத்திவைப்புத் தீர்மானம் ஒன்று கொண்டுவந்தார்.



சட்டமன்றம் நடக்கும் இடத்தைச் சுற்றித் தடை ஆணை போடப்பட்டுள்ளது. இதைச்சென்னை நகரக் காவல் துறை ஆணையர் பிறப்பித்துள்ளார். அமைதியான முறையில் பொதுமக்கள் தங்கள் கருத்தைத் தெரிவிக்கவும், அதற்காக ஊர்வலம் வரவும் உள்ள அடிப்படை உரிமையை இந்தத் தடை ஆணை பறிப்பதாக உள்ளது.

இதன் மூலம் சென்னை நகரக் காவற்படை ஆணையர் தமது செல்வாக்கைத் தவறாகப் பயன்படுத்துவதாக இருக்கிறது.

அடிப்படை உரிமையைக் காப்பாற்றுவதே அரசினரின் முதற்கடன், ஆயின் இவ்வரசினரோ பொதுமக்களிடமிருந்து அடிப்படை உரிமையைப் பறித்துக்கொள்வதிலேயே கண்ணுங்கருத்துமாய் இருக்கின்றனர்.

காவற்படையினர் ரிப்பன் மாளிகையின் ஓரமாக காங்கிரசார் நடத்திய முறையற்ற கிளர்ச்சியைத் தடுத்து நிறுத்தாது விட்டுவிட்டனர்.

கள்ளங்கபடமற்ற மக்களின் உரிமைகளை இவ்வரசினர் பறிக்க எண்ணுகின்றனர், தங்கள் ஒழுங்கற்ற செயலுக்குத் திரைபோட முயலுகின்றனர். இது காங்கோ நாட்டிலோ அல்சீரிய நாட்டிலோ சரியாக இருக்கலாம். ஆனால் இக்குடியாட்சி நாட்டுக்கு அது சரியானதன்று. முறையற்றதுமாகும் இவவாறு ஒத்திவைப்புத் தீர்மானம் கொணர்ந்த மதியழகன் பேசினார்,

முதலமைச்சர் பக்தவத்சலம் இது குறித்துக் குறிப்பிடுகையில் "சட்டமன்றத்துக்கு வெளியே முறையற்ற கிளர்ச்சிகள் நடத்துவது குடியாட்சிக்குப் புறம்பான தொன்றாகும். இவ்வாறே உரிமைக்குழுவும் பரிந்துரைத்துள்ளது. அதன் அடிப்படையில்தான் ஆணையர் நடவடிக்கை எடுத்துள்ளார். இங்கிலாந்துப் பாராளுமன்றத்திலும் அவையைச் சுற்றி ஒரு மைல் தூரத்துக்கு தடை போடப்பட்டுள்ளது. ஆகவே இது ஒத்திவைப்புக் தகுந்தது அல்ல" என கூறினார்.

# தி. மு. க. வட்டக் கூட்டம்

## ஒரத்தநாடு

ஒரத்தநாடு, அக். 2

20-10-66 அன்று மாலை 5 மணிக்கு குமரி அச்சகத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ஆண்டியப்பன் தலைமை தாங்கினார். அதுபோழ்து உணவு போராட்டத்திற்கு ஒத்துழைப்பும் ஆதரவும் நல்கிய அனைத்துப்பகுதி மக்களுக்கும் நன்றி கூறியும் போராட்டத்தில் கலந்து கொண்டு கைதானவர்களுக்கும் கலந்து கொண்டவர்களுக்கும் பாராட்டுதல் தெரிவிக்கப்பட்டது. அன்றையக் கூட்டத்திற்கு சிறப்பாளராக வழக்கறிஞர் கணேசன் வருகைதந்திருந்தார். வட்டக் கழகத் தேர்தல் வேலைகளைக் கவனிக்கத் தனிக்குழு ஒன்று வட்டக்கழக செயலாளர் திரு, இராமச்சந்திர மூர்த்தி தலைமையில் ஏற்படுத்தப்பட்டது.

★

ஆசிரியரும் வெளியிடுபவரும் டாக்டர் சி. இலக்குவனார். பொறுப்பாசிரியர் இ. மறைமலை B. Sc. அச்சிட்டது: குறள்நெறி அச்சகம் திருப்பரங்குன்றம், மதுரை 5 தொலைபேசி: 8-6